RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt224104

# தணிகைச்செல்வன் கவிதைகளில் பெண்ணியச் சிந்தனைகள்

**சு. உமாராணி [அ, *], சி. அங்கயற்கண்ணி [அ]**

[அ] தமிழ்த்துறை, சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு - 638004, தமிழ் நாடு, இந்தியா

# Feminist Ideas in Thanigaichelvan's Poems

**S. Umarani [a, *], C. Angayarkanni [a]**

[a] Department of Tamil, Chikkaiah Naicker College, Erode – 63800, Tamil Nadu, India.

* Corresponding Author: umarani8478@gmail.com

Received: 30-05-2022
Revised: 18-09-2022
Accepted: 02-10-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

Women's liberation means that women should progress in society to a level that amazes everyone, by gaining equal rights like men and having equal competence in all fields. In the poems of Thanikai Selvan, he expresses in various ways that women should achieve liberation; their rights should be protected; and the world should accept that they are equal members of society.

**Keywords:** Thanikai Selvan, Society, Equal Rights, Liberation

## முன்னுரை

பெண் விடுதலை என்பது, பெண்கள் சமுதாயத்தில் ஆண்கள் போல சம உரிமை பெற்றும், எல்லாத் துறைகளிலும் சமமான தகுதி பெற்றும் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும் அளவிற்குச் சமுதாயத்தில் முன்னேற வேண்டும் என்பதே ஆகும். தணிகைச் செல்வன் கவிதைகளில் பெண்கள் விடுதலை பெற வேண்டும்; அவர்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்; அவர்களும் சமுதாயத்தில் சமமானவர்கள் என்று இந்த உலகம் ஏற்றுக் கொள்ள வேண்டும். என்று தனது கருத்துக்களை பல விதங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

## பெண்ணியம்

'பெண்ணியம்" என்பது சமூக அக்கறையின் வெளிப்பாடு; சமூகத்தின் சரிபாதியான பெண் இனத்தின் இருத்தலைப் பேசுவது; ஆணாதிக்கப்பிடியிலிருக்கும் நிகழ்வாழ்வின் இயல்பினை விண்டுரைப்பது; மரபு என்ற சமூக மதிப்பீட்டைக் கேள்விக்குள்ளாக்குவது" என்று முனைவர் பிரேமா கூறுகிறார். (பிரேமா,இரா., 2000)

பெண்கள் சமூகத்தின் உள் மற்றும் வெளிப்பாடாகத் திகழ்வதில் அவர்களின் சமுதாய நலனும், சமூகத்தின் அக்கறையும், மற்றும் சமுதாயத்தில் ஆண்களும், பெண்களும் சரிநிகர் சமம் என்ற பெருமையைப் பெண் இனம் நிலை நாட்டுகிறது. ஆண்களின் ஆளுமை உடைத்து, அவர்களின் முன்னேற்றத்தைத் தடுக்கின்ற பிரச்சனைகளைத் தீர்த்து அதை அகற்றி அவர்களின் மரபை மதிக்கும்படியாக உலகில் அனைவரும் வியப்பு அடையும்படி கேள்வியடையச் செய்வதுதான் பெண்ணியத்தின் நோக்கம் ஆகும்

## இடப்பாகம்

தணிகைச்செல்வனின் கருத்து ஆண்களுக்குப் பெண்கள் அடிமையாக இருந்துவிட்டனர். உலகத்தில் வாழும் மனிதர்கள் பலபேர் பலஇனம் ஆனால் பெண் என்பவள் ஒரே இனந்தான் அதுதான் பெண் இனம்.

"மண்விடுதலைக்காக பரித்துண்டு ஆயிரம் பேர் !

பெண் விடுதலைக்காகப் பிணமானோர் எத்தனை பேர் !

மண்வேறு பெண்வேறு என்று ஆண்கள் நினைப்பாரேல்

பெண்!விடுதலைக்காகப் பெண்குலமே புயலாகும்." (தணிகைச்செல்வன், 2001)

இந்த உலகத்தில் தன்னுடைய நாடு விடுதலை பெற வேண்டும் என்று பலபேர் இந்த மண்ணுலகத்திற்காகத் தன்னுடைய உயிரை அளித்துள்ளனர். அதுபோல பெண் விடுதலை பெற வேண்டும். அவர்கள் சமுதாயத்தில் சமநிலையில் இருக்க வேண்டும். என்று பலபேர் உயிரைக் கொடுத்துள்ளனர். இதில் இந்த மண்வேறு, மற்றும் பெண்விடுதலை என்பது வேறு என்று நினைத்துக் கொண்டிருக்கும் ஆண்கள் சமுதாயம் தலைதூக்கி நிற்பதால் பெண்விடுதலை பெறலாம் முடியவில்லை. எனவே இந்த நிலைமாறப் பெண்கள் அனைவரும் சேர்ந்து பெண் இனத்திற்காகக் குரல் கொடுத்து, அவர்கள் புயல்களாக மாறவேண்டும். என்று தணிகைச் செல்வன் கூறுகிறார்.

## பெண்ணின் நிலை

தெய்வங்களில்கூட பெண்களுக்குச் சம உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆணின் ஆசைக்கும், காம வெறிக்கும் பெண் என்பவள் போலப் பொருளாக இருக்கிறாள்.

'அச்சம், மடம், நாணம், அவருக்காம்! அவை தவிர்த்த

மிச்சமிருக்கின்ற வெறியெல்லாம் இவனுக்காம்!

எச்சில் படாதவளாய் இருக்கணுமாம் இவன் மனைவி!

'எச்சில் படுத்துவதே" இவன்வேலைவேறிடத்தில்! (தணிகைச்செல்வன், 2001)

பெண்களுக்கு உள்ள குணங்களில் அச்சம், மடம், நாணம் என்பவை பெண்களுக்கேயுரியவை ஆனால் ஆண்கள் பெண்களின் உடைமையையும். உடலையும் சீர்குலைத்து, அவர்களைச் சமுதாயத்தில் அடிமைப் பொருளாக ஆக்கிவிடுவார்கள். அவன் மனைவி சிறந்தவளாக இருக்க வேண்டும். பிற ஆணை நோக்குபவளாக இருக்கக் கூடாது, பிறர் பயன்படுத்தும் காமப்பொருளாக இருக்கக்கூடாது, என்ற எண்ணம் ஆண்கள் அதிகமாக உள்ளது. அந்த நிலைமாறிப் பெண்கள் ஆண்கள் போல திகழ வேண்டும் என்று தணிகைச்செல்வன் கூறுகிறார்.

இதே கூற்றைப் பெரியார் கூறுவது ஆண்களுக்கு உண்டான அனைத்துச் சலுகைக்களும், உணர்வுகளும் பெண்களிடத்தில் இருக்கின்றன.

'ஆணைப்போலவே பெண்ணுக்கும், வீரம், வன்மை, கோபம்

ஆளுந்திறன் உண்டென்பதை ஆண்மக்கள்

ஒப்புக் கொள்ள வேண்டும்." (பழனிச்சாமி,தி.,1997)

பெண்களுக்கு உண்டான செயல்களில் அவர்களின் வீரம் ஒருபோதும் குறைந்ததில்லை. சங்க இலக்கியத்தில் பெண்களின் வீரத்தைக் கூறுகின்றனர் புலவர்கள். வன்மை பொருந்தியவன் வரலாற்றில் பெண்களின் வீரச்செயல் எப்படிச் சித்தரிக்கின்றனர். என்று வரலாற்று ஆய்வாளர்கள்

கூறுகின்றனர். இந்த நாட்டை ஆளுமை செய்யும் திறன் பெண்களிடம் உண்டு என்பதை ஆண்கள் ஒப்புக் கொள்ள வேண்டும். என்று பெரியார் பெண்ணின் நிலையைக் கூறுகிறார்.

## மாதர் ஜனநாயகம்

என்ற தலைப்பில் உழைப்பால் மூலதனம் பெரும் அதன் மூலம் தம் வாழ்வை சிறப்பாக்கலாம். என்று நினைக்கும் உழைப்பாளியின் நிலை என்னவோ அதே போலத்தான் பெண்ணின் நிலை அவள் எங்கு சென்றாலும் அடிமைப் பொருளாக இருப்பதைச் சுட்டுகிறார்.

'கூலி உழைப்பாலே மூலதனம் வளரும்

மூலதனத்தாலே கூலி ஜனம் நலியும்

கூலி ஜன அடிமை உருவாகும் முன்பே

தாலிகளின் அடிமை பெண்களென வந்தோம்."(துணிகைச்செல்வன், 2001)

உழைப்பவரின் நிலை மூலதனம் கூறும்போது பெண்களின் தாலி, தாலி என்ற அமைப்பை ஏற்படுத்தி ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்தி வைத்துள்ளார்கள். உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்களையும், சமுதாயத்தில் நலிந்தவர்களையும் எப்படி அடிமைப்படுத்தி அவர்களின் இரத்தத்தை உறிஞ்சுகின்றார்களோ? அதுபோல தாலி என்ற அமைப்பில் பெண்களை அடிமைப்பொருளாக நினைக்கிறார்கள் ஆண்கள் என்று தணிகைச்செல்வன் கூறுகிறார்.

சமுதாயத்தில் பெண்கள் உயர்ந்தவர்கள் என்று நினைக்கின்றோம். ஆனால் அவர்கள் உயர்ந்தவர்கள் அல்ல. அவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது அவர்களுக்கு இந்த உலகம் சொந்தமில்லை மற்றும் வியாபாரப் பொருளாக இருக்கின்றனர்.

'சொத்துரிமையோடு தொத்தி வரும் உரிமை

ஆண் உரிமை என்றான்; அவனடிமை ஆனோம்!

விற்கும் உரிமைக்கும் விதி உண்டு என்றான்

சந்திரமதி ஆனோம் சந்தை விலை போனோம்." (துணிகைச்செல்வன், 2001)

வாழுகின்ற பெண்களில் சொத்தில் உரிமை இல்லை அது ஆண்களுக்கு மட்டுமே சொந்தம், ஆண்களுக்குப் பெண்கள் அடிமைகளாக இருக்க வேண்டும். அவர்கள் இல்லையென்றால் அவர்கள் உரிமை பறிமுதல் செய்து வீதிக்குத் தள்ளப்படுகின்றனர். எதுபோல என்றால் சந்திரமதி போல பெண்களின் நிலை உள்ளது. அவர்கள் சந்தையில் விற்கும் மாடுகள்போல பெண்களின் நிலை என்று தணிகைச்செல்வன் கூறுகிறார்.

பெண்களுக்கும் ஆண்களைப்போல சொந்த உரிமை வேண்டும். அதற்காகப் புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டு அவை நிறைவேற்றப்பட வேண்டும் என்று பெரியார் கூறுகிறார்.

'இல்வாழ்க்கை என்பது ஒரு ஆண், ஒரு பெண், இருவரும் சமநிலையில் இருந்து சமமாகவே அனுபவிப்பதாகும் பெண்களுக்கு ஆண்களைப் போன்ற சொத்து உரிமையையும், இருவருக்கும் திருமணம் இரத்து உரிமையையும் அளித்து அவைகள் சட்டமாக்கப்பட வேண்டும்." (பழனிச்சாமி,தி.,1997)

இல்லற வாழ்க்கையில் ஆண், பெண், இருவரும் சமம், இதில் ஆண்களுக்கு சொத்தில் உரிமை உண்டு. பெண்களுக்கு சொந்த உரிமை இல்லையென்றால் இங்கு நீதி கொள்ளப்படுகிறது. இங்கு ஆணின் ஆதிக்கம் உள்ளது. பெண்ணின் ஆதிக்கம் நிலைபெறவில்லை, இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பெண்கள் ஆண்களை விட்டு விலக விவாகரத்து வழங்க வேண்டும். என்ற சட்டம் கொண்டு வரவேண்டும் என்று பெரியார் கூறுகிறார்.

பெண்களுக்கு அனைத்து உரிமைகளும் பறிக்கக்கூடாது. எல்லாத் துறைகளிலும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

'திருமணமான பெண்களுக்குச் சொத்தில் உரிமை"

பாலியல் இன்பத்தில் மட்டும் உரிமை கிடையாது. எல்லா இன்பத்திலும் பெண்களுக்கு உரிமை உண்டு. அதிலும் அவளுக்கு சொத்தில் உரிமை உண்டு என்ற கூற்றை இரா.பிரேமா கூறுகிறார். (பிரேமா,இரா., 2000)

## கற்புக்கருத்து

கற்பு என்பது விலைப்பொருளாக இருக்கக்கூடாது ஏழைகளை உயர்த்த வேண்டும். நிலையை மேம்படுத்த வேண்டும்.

'கற்பு என்ற சொல்லுக்கு, சங்கற்பம், தியானம், சரண்புகல், ஆணை வேலைப்பாடு, முல்லை என்றெல்லாம் பொருள் இருக்கிறதென்று பலருக்கும் தெரியாது, ஆனால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கொண்ட கணவனைத் தெய்வமென்று உணர்ந்து அவன் எத்தகையவனாக இருந்தாலும், தன்னை அவனுக்கே உரித்தாக்கும் ஒழுக்கத்தில் இருந்து சிறிதும் வழுவாமல் மனைவியானவள் கடைப்பிடிக்க வேண்டியதொரு பண்புதான் கற்பு என்பது எல்லோருக்கும் உணர்த்தப் பட்டிருக்கும்."

கற்பு என்ற சொல்லுக்குப் பலவிதமான பொருட்கள் கூறுகின்றனர். ஆனால் பெண்ணைப் பொருத்தவரையிலும், கணவனைத் தெய்வமாக நினைத்து அவனை வழிபடுகிறாள். அந்த பெண்மைத் தன்மையை அவனுக்கே உரித்தாக்குகிறாள் இதைத்தான் பெண்களின் உயர்ந்த நிலை விளக்குகிறது என்று ராஜம்கிருஷ்ணன் கூறுகிறார். (இராஜம் கிருஷ்ணன், 2003)

'ஆண்மக்களுக்கெல்லாம் தெய்வங்கள் உண்டு, ஆனால் பெண்ணுக்கோ தெய்வம் என்பது கணவன் தான், அதிகாலையில் எழும்போதே, அவனைத் தொழுது எழுதல் வேண்டும். காரணம். அவளுக்கு வேறு தெய்வம் இல்லையே." (வீரமணி,கி.1998)

ஆண்மகளின் தெய்வப்பற்று உண்மைதான் ஆளால் பெண்மையின் தெய்வப்பற்று சிறந்தது, அது உலகில் விலை கொடுத்தாலும் வாங்கமுடியாது ஏனெனில் அவளின் 'கற்பின்" பெருமையை வெளிப்படுத்துகிறது. தன்னுடைய கணவனையே தெய்வமாக நினைத்து வழிபடுகிறாள். இதைவிட இவளுக்கு வேறு தெய்வம் இல்லையென்று கூறுகிறாள் என்று கி.வீரமணி கூறுகிறார்.

## புதியதோர் கற்பு

பெண்களின் தன்மையைப் பலவிதமாகச் சித்தரித்துள்ளார். பெண்கள் வீட்டின் பெருமைகளைக் காப்பாற்றுவதோடு இல்லறத்தின் பெருமையும் நிலை நாட்டுகிறாள். எவ்லாப்பொருளும், கனவாக உள்ளது. தன்னுடைய வாழ்க்கை மற்றும் அனைத்திலும் கற்பனையாகவே உள்ளது என்கிறாள்.

'எந்தப் பெண்ணும் எந்த ஆணும் சேர்ந்து பழகலாம் வாய்ப்பு

இல்லையென்றால் அதை மறந்து இனிது பிரியாலாம்

சிந்தையிலே காலமெல்லாம் ஒருவனுக்கென்றே - இந்தச்

சந்தை வாழ்க்கைப் பரபரப்பில் இயலுவதெங்கே" (துணிகைச்செல்வன், 2001)

இந்த உலகில் வாழுகின்ற எந்தயொரு ஆண்மகனும் எந்தப் பெண்ணின் மீது ஆசைப்படலாம். அது ஆரம்பத்தில் நட்பாக இருக்கலாம். பிறகு அதை ஒருவருக்கொருவர் ஏற்காமலும் அல்லது நட்பை மறந்து பிரிந்து வாழலாம். ஆனால் பெண்கள் தன்னுடைய மனதில் ஒருவரை நிலை நிறுத்தி அதன்மூலம் தன்னுடைய வாழ்க்கையைச் சிந்தையிலே நிறுத்துகிறாள்.

இந்த நிலைமாறி சந்தையில் விலைப்பொருளாகத் தன்னுடைய வாழ்க்கையை நினைக்கிறாள் என்று தணிகைச்செல்வன் கூறுகிறார்.

## இடதுசாரி

புராணங்களிலும், இதிகாசத்திலும் பெண் போற்றப்படுகிறாள். பெண்மையை இனிமேல் விலைப்பொருளாக மாற்றமுடியாது ஏனெனில்,

'நாளைய பெண்

சிறைக்கம்பிகளைப் பிடுங்கித்

கொடிக்கொம்புகளாக மாற்றுவாளா?

நான் பூங்கொடி அல்ல போர்க்கொடி என்று நாட்டுவாளா?" (தணிகைச்செல்வன், 2001)

பெண் சந்தையில் விற்பனைப் பொருளாக இருக்கும் புராணங்களில் பெண்மையை இழிவுபடுத்தியே கூறுகின்றனர். இதிகாசங்களில் பழமையைப் போக்கி புதுமைப் போற்றியிருக்க வேண்டும். ஆனால் அது முடியவில்லை ஆனால் இக்காலப் பெண் சிறைக் கதவுகளைத் தகர்த்துப் புதுமையான முறையில் இந்த உலகத்தைக் கொண்டுள்ள தன்மை பெண்ணிடத்தில் இருக்கிறது. அவளின் நிலை உயர்த்தப்பட வேண்டும் என்று தணிகைச்செல்வன் கூறுகிறார்.

## வக்கிரம்

பெண்கள் புழுக்களைப் போல பிறரிடம் தள்ளிவிடப்படுகின்றனர். பெண்களைப் போகப்பொருளாக நினைத்துப் பருகி, பருகிய பின் கற்களாக வீசிவிடுகின்றனர். பழமையில் பெண் அடிமையாகவும் துன்புறுத்தப்பட்டாலும் கணவனைத் தெய்வமாகப் போற்றினாள்.

'என்னையா ஆண் கவிஞர்!

என்ன நீர் விழிக்கின்றீர்!

பெண்ணைப் பல கூடும்

பெருமை உமக்கானால்

பின்னை அவன் அந்த

உரிமையினைக் கோரளோ?

கண்ணைப் பறிகொடுத்துச்

சித்திரத்தை வாங்குகிறீர்!" (தணிகைச்செல்வன், 2001)

பெண் கற்பில் சிறந்தவள் அவள் கற்பை விலைப்பொருளாக நினைக்கும் ஆண் சமுதாயம் ஏளனமாகப் பேசுகிறது. பெண்களை ஒதுக்கிவைக்கின்றனர். பெண்களைப் பெருமைப்படுத்தினால் அவளுக்கு வருகின்ற பெருமையெல்லாம் ஆண் இனமே அது உனக்குச் சேராத பின்பு அவள் விழிப்புடன் இருந்து அவள் உரிமை நிலைநாட்ட முற்படுவாள் அப்பொழுது ஆணின் நிலையென்ன ! சற்று நினைவில் வை. கண்களை இழந்த பின்பு சித்திரத்தைப் பரிசுபொருளாக வாங்குவது போல் உள்ளது என்று தணிகைச் செல்வன் கூறுகிறார்.

## புதுமைப்பெண்

பெண்களை முன்னேறவிடாமல் அவர்களின் வாழ்வை சீர்குலைகின்றனர். உழைக்கும் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை, ஏனெனில் சமுதாயத்தில் ஆண்வர்க்கத்தின் ஆட்சி

மேலோங்கி உள்ளது. இப்படியிருக்க அவர்களின் வாழ்வு எப்படிச் செழிக்கும் ஆண்வர்க்கத்தினர் உழைத்த பெண்ணின் வியர்வைகளை உடைமைகளைச் சுரண்டி அவர்களை அடிமைப்படுத்துகின்றனர். உயர்ந்த வர்க்கத்தில் இருக்கும் முதலாளிகள் உழைக்கும் பெண்ணின் பேர்களைப் பாழ்படுத்த நினைக்கிறான், அடிமைப்படுத்துகிறான் இந்த நிலைமாறி

'ஒழைக்க ரெண்டு கையிருக்கு

கழனி வயலிலே - திருப்பி

ஒதைக்க நெஞ்சு துணிஞ்சிடுச்சு

போடவெளியிலே" (தணிகைச்செல்வன், 2001)

தணிகைச்செல்வன் இன்றுள்ள புதுமைப்பெண்கள் அனைவரும் ஆண்களுக்கு ஈடாக அனைத்துத் துறைகளிலும் பணிபுரியும் வல்லமை படைத்தவர்களாக, கல்வியறிவு பெற்றவர்களாக எந்தச் சூழ்நிலையிலும் திறமையை மாற்றிக்கொள்ளும் படைத்தவர்களாக, நாட்டை ஆளும் தன்மை பெற்றவர்களாகப் பெண்கள் திகழ்கின்றனர். ஆண்கள் தமக்கு இழைக்கும் கொடுமைக்கு எதிராகச் செயல்படக்கூடிய வல்லமை படைத்தவர்களாகத் திகழ்கின்றனர். எனவே தம்மால் உழைக்க இரண்டு கைகள் இருக்கு ஆதலால் ஆண் வர்க்கத்தைச் சார்ந்து வாழவேண்டிய அவசியமில்லை போடா வெளியே! என்று தம் பாடலின் வாயிலாக பெண்கள் கூறுவதாகத் தணிகைச்செல்வன் கூறுகிறார்.

புதுமைப் பெண்கள் இன்று பழைய நிலைமாறி நிமிர்ந்த நடையும். நேர்கொண்ட பார்வையும், பெற்றுத் திகழவேண்டும் என்று பாரதியார் விரும்பினார்.

'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்

நிலத்தில் யார்க்கும் மஞ்சாத நெறிகளும்

நிமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்

செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்

அமிழ்ந்து பேரிருளாமறி யாமையில்

அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை

உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்

உதய கன்னி யுரைப்பது கேட்டிரோ! (பாரதியார்.,1998)

புதுமையான பெண்கள் நிமிர்ந்த நடையையும், உயர்வு தாழ்வு என்றும் பாராமல் நேர்மையான பார்வையும், இந்த உலகில் எவருக்கும் அஞ்சாமல் நெறிகளையும், சிறந்த அறிவும், ஞானச்செருக்கும் கொண்ட பெண்கள் இந்த உலகில் திடமான நெஞ்சம் உறுதி கொண்டமனதையும் பெற்றுள்ளனர். அவர்கள் அறியாமையில் மூழ்காமல், அவலத்தை எதிர்த்து, கலைகள் பல பயின்றதனால் ஆண்களை எதிர்த்து சமுதாயத்தில் பெண்கள் முன்னேற வேண்டும் என்று புதுமை நோக்கில் பாரதியார் கூறுகிறார்.

'பொல்லாத வானோட காலம்

பூராச் சாகனும் ? - இந்தப்

பொழிப்பு போது ! இனி எனக்கு

விடுதலை வேணும்!" (தணிகைச்செல்வன், 2001)

பொல்லாத மடமைகளை அகற்றிப் பெண்களை அடிமைப்படுத்தும் காலம் இனியும் வேண்டாம். இந்த கொடுமைகள் அனைத்தும் ஒழியவேண்டும். இந்த வாழ்வை விட்டேறியுங்கள். புதுமையான நோக்கில் பெண்களை முன்னேற்றுங்கள். பெண்களுக்கு விடுதலை தாருங்கள்

அப்போதுதான் அவன் யாழ்வு செழிக்கும் சமுதாயம் முன்னேறும் என்று தணிகைச்செல்வன் கூறுகிறார்.

## இரு கட்சிக்கும் பொது

இந்தக் கால மணவர் குண நலன்களைப் பார்க்கும்போது பெண்ணை இழிவுபடுத்துவதும், கேவலப்படுத்துவதும் இவர்களின் நிலை.

‘இந்தக் காலப்

பையன்களிடமிருந்து

ஏன்

உன்னிடமிருந்தே கூட

நீ

கற்பைக் காப்பாற்றுவது

கடினம்

எனவே

'கருப்பை” காப்பாற்றிக்கொள்

கவனம்

கவனம்" (தணிகைச்செல்வன், 2001)

பெண்களின் பெண்மைத் தன்மையைக் காப்பாற்றுவது பெண்ணின் முதல் உடமையாகும். ஏனெனில் அவளின் 'கற்பு” எப்போது வேண்டுமானாலும் பறிக்கப்படலாம். இந்தக் கால மாணவர்களின் பண்பு அப்படியுள்ளது. ஆசைகளைக் கூறி கற்பனையை ஊட்டி அவளை மயக்கிப் பெண்மையை இழிவுபடுத்துகிறான். அப்போது பெண்ணின் தன்மை கேள்விக்குறியாகி ‘கருப்பை” காப்பாற்றும் தன்மையை இழக்கிறாள். எனவே பெண்ணே உன் வாழ்க்கையில் கற்பு மற்றும் 'கருப்பை' பாதுகாவலராக வைத்துக்கொள்ள கவனம் தேவை என்று தணிகைச்செல்வன் கூறுகிறார்.

‘அவனோ

அதை இழக்க

எப்போதும் தயார்

நீயோ

அதை இழக்க

எப்போதாவது தயார்

தயாராவது வேறு

தாயாராவது வேறல்லவா?" (தணிகைச்செல்வன், 2001)

ஆணின் வர்க்கமானது தன்னுடைய மதிமயக்கத்தில் தன்னையும் இழந்து பிறரையும் கேலி செய்வது ஆண்மைத் தன்மை அதற்கு அடிமையாகாமல் பெண்ணின் கற்பு பறிபோகாமல் தன்னையும் தாயாராகும் கன்னித் தன்மையும் காப்பாற்றுவது பெண்மைத் தன்மையே என்று தணிகைச்செல்வன் கூறுகிறார்.

பெண்மையை உயிருக்குயிராகப் போற்ற வேண்டும். கருவறையையே கல்லறையாக்கிப் பெண்ணைக்கொண்டே பெண் வித்துக்களை அழிக்கும் இந்தக் கலியை எந்த அறமும் அழிக்கவில்லையே!

'பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா
பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா
வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா
கலிய ழிப்பது பெண்களறமடா
உயிரைக் காக்கும் உயிரினைச் சேர்ந்திடும்
உயிரினுக்குயி ராயின்ப மாகிடும்." (பாரதியார்., 1998)

பெண்மை இந்த உலகில் வாழவேண்டும். செழிப்புடன் போற்ற வேண்டும். அவர்கள் பல நூல்கற்று இந்த உலகத்தை வெல்லவேண்டும். ஆண்களின் இனத்திற்கும் பெருமை சேர்ப்பது தாய்மை, அதிலும் தாய்மையின் முலைப்பாலாகும். மேலும் இந்த உலகத்திற்குத் தலைகாட்டுவது பெண்மையாகும்.

பெண்களின் கருவறையே கல்லறையாக்கி மனிதர்களை உலகில் நிலைநிறுத்துவது பெண்மையாகும். உயிருக்குயிர் தருவது பெண்மை, பெண்மையின் மூலம் புதிய உயிர்களை உருவாக்குவது பெண்மையாகும். ஆகவே இந்த உலகில் சிறந்தது பெண்மை என்று பாரதியார் கூறுகிறார்.

## முடிவுரை

தணிகைச்செல்வன் கவிதைகளில் பெண்விடுதலை பெற வேண்டும் என்ற கருத்துக்கள் மிகுந்துள்ளன. மண்ணுக்கு விடுதலை கூட பெண்ணுக்குக் கிடைப்பதில்லை அவள் சமுதாயத்தில் எச்சில்பட்டவளாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளாள் என்று பாடுகின்றார். கவிஞர்கள் பெண்களை அவமதிக்க வேண்டாம். அவர்களை வர்ணித்து அடிமையாக்க வேண்டாம் மற்றும் உழைக்கும் பெண்ணின் நிலையை உயர்த்த வேண்டும். அதற்குப் புதிய நோக்கில் விடுதலை வேண்டும். இதிகாசங்களில் புராணங்களில் பெண்ணை அடிமைப்படுத்தும் தன்மை அம்பலப்படுத்த வேண்டும் என்று, புதிய நோக்கில் கூறுகின்றார் தணிகைச்செல்வன்.

## References

Bharathiyar (1998) Bharathiyar Poems, Manivasagar Publications, Chennai.

Palanisamy, D., (1997) Great Truths Observed by Periyar, Manivasagar Publications, Chennai.

Prema, R., (2000) Femininity, International Institute of Tamil Studies, Chennai.

Rajam Krishnan, (2003) Women's Liberation, Thakaram Publications, Chennai.

Thanikaichelvan, (2001) Thanikaichelvan Poems, Thanika Library, Chennai.

Veeramani, K., (1998) Valluvar and Women, Valluvar, Dravidar Kazhagam Publications, Chennai.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License